**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 295/2017**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.04.2026 | | |
| பெயர்: | ராமையன்<br>(PW4– Cross ) | தகப்பனார் பெயர்: | கோபாலன் |
| கிராமம்: | வழுதலைக்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 75/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 09.04.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.47)**

1. இந்த வழக்கு ராஜேந்திரன் என்பவர் கிருஷ்ணமூர்த்தி என்பவர் மீது தாக்கல் செய்யப்பட்டதாகும். ராஜேந்திரன் சாகுபடி செய்யும் நிலத்தை கிருஷ்ணமூர்த்தி ராஜேந்திரனுக்கு கிரயம் செய்து தர கேட்டதால் இந்த வழக்கு. இந்த வழக்கு எத்தனை சர்வே எண்களுக்கு என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளின் தந்தை சம்மந்தத்திற்கு எவ்வாறு கிடைத்தது என்றால் நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் மற்றும் கிரயத்தின் மூலமாகவும் கிடைக்கப்பட்டது. மேற்படி கிரயமாக பெறப்பட்ட சொத்துக்கள் எந்த வருடம் யாரிடமிருந்து பெறப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது.

2. தாவா சொத்தை பொறுத்து சம்மந்தம் எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயில் எந்த தேதி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயிலில் என்ன உள்ளது என்று தெரியுமா என்றால் ஒரு ஏக்கர் நிலம் ராஜேந்திரனின் திருமணத்திற்கு ஈடு வைக்கப்பட்ட அந்த நிலத்தை மீட்டு கொள்ள வேண்டும் என்றும், வேறு ஒரு நிலத்தை விற்று ராஜேந்திரனின் திருமணத்திற்கு செலவு

செய்ய வேண்டும் என்றும் எழுதப்பட்டுள்ளது. மேற்படி உயிலில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் உயில் எழுதிய சமயத்தில் நான் ஊரில் இல்லை, அதனால் நான் கையெழுத்து செய்யவில்லை.

3. சம்மந்தம் காலமான வருடம் எனக்கு ஞாபகம் இல்லை, சுமாராக 20 வருடத்திற்கு மேலாக இருக்கலாம். சம்மந்தத்தின் இறுதி சடங்கில் ராஜேந்திரன் மற்றும் மற்ற பிரதிவாதிகள் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தினார்கள் என்றால் சரியல்ல, ராஜேந்திரன் மட்டும் தான் இறுதி சடங்கு செய்தார். கிருஷ்ணமூர்த்தி இறுதி சடங்கு எதுவும் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி சம்மந்தத்தின் உத்திரகிரியை வாதி மற்றும் அவரது சகோதரர்கள் சேர்ந்து செய்ததாக உள்ளது என்றால் பத்திரிக்கையில் தான் உள்ளது. ஆனால், நடைமுறையில் அவ்வாறு செய்யவில்லை.

4. கிருஷ்ணமூர்த்திக்கு பாகம் பிரித்து கொடுக்கப்பட்ட சர்வே எண் தெரியுமா என்றால் கொல்லை மட்டும் தான் தெரியும், சர்வே எண் தெரியாது. நான் சொல்வது போல் தாவா சொத்து பிரித்து கொடுக்கவில்லை என்றாலும், சம்மந்தத்தின் பேரில் பொதுவாக தான் தாவா சொத்துக்கள் உள்ளது என்றாலும் சரியல்ல. அதை போல் ராஜேந்திரன் தனிப்பட்ட அனுபவத்தில் தாவா சொத்து இல்லை என்றாலும், பொதுவான அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. வாதி எனக்கு பழக்கமானவர் என்ற காரணத்தால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.04)**